## 14

# பிறப்பும் குழந்தைப் பருவமும்

### *மத்தேயு 1, 2; லூக்கா 1, 2*

***1. தரிசனங்களின் வரிசைத் தொடர்.***—*சுவிசேஷ வரலாறு நான்கு தரிசனங்களின் வரிசைத் தொடருடன் தொடங்குகின்றது.*

*அ. சகரியாவுக்கு தரிசனம்.—சகரியா குற்றமில்லாத வாழ்க்கையைக் கொண்ட வயது முதிர்ந்த ஆசாரியராயிருந்தார். தேவாலயத்தில் அவர் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில், மேசியாவின் வருகையை தானியேலுக்கு வெளிப்படுத்திய (தானி. 9:21-23) காபிரியேல் என்னும் தூதர் அவருக்குத் (சகரியாவுக்குத்) தோன்றினார், அவர் (காபிரியேல்) அவருடைய (சகரியாவினுடைய) மனைவியாகிய எலிசபெத்துக்கு ஒரு மகன் பிறப்பதன் மூலம் அவர்களின் ஜெபங்கள் பதில் அளிக்கப்பட வேண்டியவையாக இருப்பதாக அறிவித்தார். இவ்வாக்குத்தத்தத்தின் அடையாளம் மற்றும் முத்திரையாக இதன் நிறைவேற்றம் வரையிலும் அவர் ஊமையாய் இருக்க வேண்டியிருந்தது.*

*ஆ. மரியாளுக்குத் தரிசனம்.—எலிசபெத்துக்கு, தாவீதின் வம்சத்தில் வந்த மரியாள் என்றொரு உறவுப் பெண் இருந்தாள். அவள் யோசேப்பு என்ற பெயர் கொண்ட மனிதருக்கு (திருமணம் செய்விக்க) நியமிக்கப் பட்டிருந்தாலும், இன்னும் திருமணம் ஆகாதவளாயிருந்தாள். அவளும் ஒரு மகனைப் பெறுவாள் என்ற மகிழ்ச்சியான செய்தியுடன் அதே தூதர் (காபிரியேல்) அவளிடத்திற்கு அனுப்பப்பட்டார்: அக்குழந்தை பரிசுத்த ஆவியின் வழித் தோன்றலாக இருக்குமாதலால், தேவனுடைய குமாரன் என்றழைக்கப்படுவார், அவர் மனிதர்களின் இரட்சகராயிருப்பார். சந்தோஷத்தில் மூழ்கிய மரியாள், கலிலேயாவின் நாசரேத்திலிருந்த தனது இல்லத்திலிருந்து புறப்பட்டு தனது உறவினளை(எலிசபெத்தை)ச் சந்திப்பதற்காக யூதேயாவின் மலை நாட்டிற்குச் சென்றாள்.*

*இ. யோசேப்புக்கு (சொப்பனத்தில்) தரிசனம்.—மரியாள் (மீண்டும்) நாசரேத்தூருக்குத் திரும்பி வந்த பொழுது, அவளது சந்தோஷத்தின்மீது வருத்தத்தின் மேகங்கள் நிழலிட்டன. யூதர்கள் மத்தியில் திருமண நிச்சயதார்த்தம் என்பது திருமணத்தைப் போன்றே பரிசுத்தமானதாயிருந் தது; மரியாள் அந்த பந்தத்தை மீறியதாகக் காணப்பட்டது அவளுக்கு அவகீர்த்தியான மரணத்தைக் கொண்டு வருவதாயிருந்தது. ஆனால் யோசேப்புக்கு ஒளியூட்டிய மூன்றாவது தரிசனமானது நிகழ்ச்சிகளின் மேன்மையான முக்கியத்துவத்தை உணர்த்தியதுடன், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட குமாரன் இம்மானுவேல்—தேவன் நம்மோடிருக்கிறார் என்ற பெயர் உடையவராயிருப்பார் என்று தீர்க்கதரிசனமும் கூடுதலா*

யுரைக்கப்பட்டது (இ.வ. மத். 1:23; ஏசா. 7:14).

**2. பெத்லகேமில் முன்னணைத் தொட்டில்.**—ஏற்ற காலத்தில் இவ்விரு வாக்குத்தத்தங்களும் நிறைவேற்றப்பட்டன. (தேவனுடைய) தெய்வீக ஆணையின்படி சகரியாவும் எலிசபெத்தும் பெற்ற மகனுக்கு யோவான் என்று பெயரிடப்பட்டது. ஒரு சில மாதங்களுக்குப் பிறகு மரியாள் தனது முதற்பேறான மகனைப் பெற்றாள், (தனக்கு கிடைத்த) தரிசனத்தில் கூறப்பட்டதற்கிணங்க அவரை இயேசு—இரட்சகர் என்று அழைத்தாள். பிற வழி முறைகள் பலவற்றைப் போன்றே இங்கும் மனிதனுடைய திட்டங்கள் தெய்வீக நோக்கத்துடன் அறியா வகையிலேயே உள்ளுறவு படுத்தப்பட்டன. மேசியா பெத்லகேமில் பிறக்க வேண்டியதாயிருந்தது (மீகா. 5:2). மரியாளுடைய இல்லமோ தொலைவில் இருந்த நாசரேத்தூரில் இருந்தது. அகுஸ்து ராயனிடமிருந்து பிறப்பிக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பிற்கான ஆணையானது மரியாளையும் யோசேப்பையும் அவர்களின் சொந்த ஊரான/கிராமமான பெத்லகேமுக்கு அனுப்பியது. மார்ட்டின் லூத்தரின் தாய்க்குப் போலவே, இல்லத்திற்கு வெளியே பிரசவ வேதனையின் விளங்காத வலிகள் மரியாளையும் ஆட் கொண்டன. சத்திரம் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது, இந்தத் தாழ்மையான தம்பதியார், தொழுவத்தில் தங்கக் கூடிய அளவுக்குத் தான் அவர்களால் ஒரு தங்கும் இடத்தைக் காண முடிந்தது. அங்கே, அகுஸ்து ராயன் பரந்துபட்ட பேரரசின் திட்டங்களில் வெகு மும்முரமாய் ஈடுபட்டிருக்கையில், ஏரோது புதிய கொடுஞ் செயல்களைத் திட்டமிட்டுக் கொண்டிருக்கையில், மற்றும் மாபெரும் உலகத்தில் ஒவ்வொருவரும் தமது சொந்த வழியைப் பின்பற்றி சென்று கொண்டிருக்கையில், மிகச் சிறப்பான நிகழ்ச்சி பற்றி அனைவரும் அறியாதிருக்கையில், தெய்வீக மனிதர் பிறந்தார்.

**3. மேய்ப்பர்களுக்குத் தரிசனம்.**—பூமியானது தனது அரசரின் வருகை பற்றி அறியாதிருந்தது; ஆனால் பரலோகத்தினால் அதை மௌனமாய்க் காத்துக் கொள்ள முடியாமற் போயிற்று. தூதர்கள் மகிழ்ச்சி அலைகளைக் கொண்டு வந்தார்கள், மற்றும் "பூமியின் மீது சமாதானம்"[1] என்ற தங்களின் பாடலைப் பாடினார்கள். இதை அவர்கள் அரசவையில் அரசர்களுக்கோ, அகம்பாவமுள்ள ஆசாரியர்களுக்கோ அல்லது பகட்டுக்காரப் பரிசேயர் களுக்கோ பாடவில்லை, ஆனால் தாழ்மையான மேய்ப்பர்களுக்குப் பாடினார்கள். அவர்கள் உடனே அவரது எளிமையான தொட்டிலுக்குச் சென்றார்கள், அவர்களே உலகத்தின் மீட்பருக்கு முதன் முதலாய் இப்பூமி யில் மரியாதை செலுத்தியவர்களாய் இருந்தார்கள். அவர்கள், "அவருடைய உபதேசத்தை விருப்பத்தோடே கேட்ட"[2] பொது மக்கள் மற்றும் அவருடைய சீஷர்களின் தொகையில் இருந்த மக்கள் ஆகியோரின் முன்னோடிகளாகவும் பிரதிநிதிகளாகவும் இருந்தார்கள்.

**4. தேவாலயத்தில் (இந்தக்) குழு.**—யூதப் பழக்கத்தின்படி எட்டாம் நாளில் விருத்தசேதனமும் பெயரிடுதலும் நடைபெற்றது. நாற்பது நாட்கள் முடிந்த பொழுது, பிள்ளைப் பிறப்பு நிகழ்வுக்குச் செலுத்த வேண்டிய பலியை (லேவி. 12) செலுத்துவதற்காக மரியாள் (பெத்லகேமில் இருந்து) ஆறு மைல்கள் தொலைவில் இருந்த எருசலேமுக்கு வந்தாள். "தேவாலயத்

தின் கர்த்தர் கர்த்தருடைய தேவாலயத்திற்கு வந்தார்." அதன் மேன்மை மிக்க முற்றத்தில் இருந்த வேதபாரகர் மற்றும் ஆசாரியருடைய இலேசான கவனத்தை (மட்டுமே) ஈர்க்கக் கூடிய அளவுக்கு அவர்களின் ஏழ்மை (இ.வ. லூக். 2:24; லேவி. 12:8) தெளிவாய் விளங்கியது. ஆனால் பெத்லகேமின் மலைகளில் போன்றே, அங்கும் (எருசலேமில்) கூட தெய்வீகத் தூண்டுதல் களுக்குத் திறந்திருந்தவைகளும் நீண்ட காலமாய் எதிர்பார்க்கப்பட்ட மேசியாவை மகிழ்வுடன் உணர்ந்தறிந்து மெய்சிலிர்த்தவைகளுமான ஆத்து மாக்கள் இருந்தனர். அப்படிப்பட்டவர்களில் முதிர் வயதான சிமியோன் மற்றும் அன்னாள் ஆகியோர் பெயர் குறிப்பிடப்படுகின்றார்கள். அவர்கள் எபிரெய இனத்தை மாண்புறச் செய்திருந்த தீர்க்கதரிசன ஆவியின் பிரதிநிதிகளாய் இருக்கின்றனர், மற்றும் இயேசுவை மேசியா என்று முதன் முதலாய் வெளிப்படையாக அறிக்கையிட்டவர்களாய் இருந்தனர்.

***5. ஞானிகளின் வருகை.***—ஆனால் பெத்லகேமின் குழந்தையினுடைய தொட்டிலை இஸ்ரவேலின் குடியானவர்களும் தீர்க்கதரிசன ஆவிக(ளையுடைவர்க)ளும் மாத்திரம் சுற்றிச் சூழ்ந்திருக்கவில்லை. மாபெரும் தொலைவிலிருந்த வரம் பெற்ற ஆத்துமாக்களும் கூட (இயேசு பிறப்பு பற்றிய) வெளிப்படுத்துதலினால் மெய்சிலிர்த்தனர். கிறிஸ்துவுக்கு மரியாதை செலுத்திய வட்டாரத்தினுள் தேவ பக்தியற்ற உலகமும் குறிப்பிடப்பட்டது. "கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்து, யூதருக்கு இராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்து கொள்ள வந்தோம் என்றார்கள்."[3] அவர்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் நாடுகள் பற்றிய பாரம்பரிய வரலாறுகளும், அந்த நட்சத்திரத்தின் இயல்பு மற்றும் அவர்களின் அறிவின் அளவு பற்றிய யூகங்களும் பயனற்றவைகளாய் உள்ளன. ஆனால் அவர்கள், மிகப் பரந்த அளவில் (தேவனுக்கு) புறம்பே இருந்த தேவபக்தியற்ற உலகின் தெளிவற்ற ஏக்கங்கள் மற்றும் நம்பிக்கை யின் பிரதிநிதிகளாக நிலைநின்றனர், மற்றும் தேவபக்தியற்ற உலகம் யாவும் நமது அரசரை அன்புடன் ஆராதிப்பதில் ஒன்றிணையும் காலத்தின் தீர்க்கதரிசனமாகவும் இருந்தனர்.

***6. ஏரோதின் கட்டளையும் எகிப்துக்குத் தப்பியோடுதலும்.***—ஏரோது மன வேதனை என்ற வியாதியில் மூழ்கிக் கொண்டிருந்தார். அமைதி யற்றிருப்பதற்கு அவரிடத்தில் அனைத்துக் காரணங்களும் இருந்தன, ஏனெனில் அவரது அரியணையானது அவரது பொறாமை நிறைந்த வெறுப்பினால் பாதிக்கப்பட்டவர்களின் (அழிவின்) மீதுதான் நிலை கொண்டிருந்தது. அவரது அரசாட்சி முழுவதிலும் திரைமறைவான சூழ்ச்சிகள் பரந்து கிடந்தன. அப்படிப்பட்ட வேளையில், அப்படிப்பட்ட மனிதருக்கு, ஞானிகளின் விசாரணையானது குறுவாளால் குத்தப்பட்டது போலிருந்தது. ஆனாலும் பயங்கரத்தையும், கொலை செய்யும் நோக்கத்தை யும் மறைத்து வைத்த ஏரோது, ஞானிகளிடத்தில் அவர்கள் பிள்ளையைக் கண்டறிந்ததும் தமக்குத் தகவல் அளிக்கும்படி கட்டளையிட்டார். அவர்களோ தெய்வீக அறிவிப்புக்குக் கீழ்ப்படிந்து வேறு வழியாகத் தங்கள் நாட்டிற்குத் திரும்பிச் சென்றார்கள். ஏரோது, பெத்லகேமிலும் அதன்

சுற்றுப்புறங்களிலும் இருந்த ஒன்றுமறியாதவர்களின்(குழந்தைகள்)மீது மூர்க்கத்தனத்தைக் காட்டினார். ஆனால் பாவத்திற்காக மனமுவந்த பலியாக அவர் (இயேசு) தம்மையே ஒப்புக் கொடுக்கத் தயாராகும் வரையிலும் அவரது உயிருக்கு எதிராக ஏதொரு சதிச் செயலும் வெற்றி யடையக் கூடாதிருந்தது. "அவர் (ஏரோது) தனது பட்டயத்தைக் கூட்டிற் குள் செலுத்தினார், ஆனால் பறவை பறந்து சென்று விட்டது." எப்பொழு துமே தெய்வீக நடத்துதல்களின் மீது கவனமாயிருந்த யோசேப்பு, ஏரோதின் எல்லைகளுக்கு அப்பால் இருந்ததும், ஆனாலும் ஏராளமான யூத மக்களின் வட்டாரத்திற்குள்ளாக இருந்ததுமான எகிப்துக்குத் தப்பிச் சென்றிருந்தார். பிறகு விரைவிலேயே ஏரோது மரித்தார். ஆனாலும் யூதேயாவில் தனது தகப்பனின் அரியணைக்கும் கொள்கைக்கும் தகப்பனுக்குப் பின் வந்த மகனாகிய அர்கெலாயுவுக்குப் பயந்த யோசேப்பு நாசரேத்திலிருந்த தனது சொந்த இல்லம் திரும்பினார்.

---

குறிப்புகள்

[1]லூக். 2:14. [2]மாற். 12:37. [3]மத். 2:1, 2.